**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**EA.No.31/2025 in EP.No.3/2023 in RLTOP No.1/2020**

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 –ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சியின் ம.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 10.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரமேஷ் (PW–1 ) | வயது | : | 59 /2026 |
| க/த பெயர் | : | திரு. சண்முகம் | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | திருச்சி | வட்டம் | : | திருச்சி |

**முதல் விசாரணை தொடர்ச்சி**

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறிப்பு | குறியீடு விவரம் |
|---|---|---|---|---|
| 1 | 08.04.2024 | நகரளவை பதிவேடு (இந்த ஆவணமானது நகலாக இருப்பதாக சொல்லியதன் அடிப்படையில் எதிர்மனுதாரரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) | நகல் | ம.சா.ஆ.5 |

எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ளவாறும் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அசல் வழக்கில் வாதியான தமிழரசன் தாவா சொத்தின் நிலச்சுவான்தார் மற்றும் வாடகை தாரர் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் தமிழரசன் நிலச்சுவான்தார் இல்லை. ம.சா.ஆ.5 ஆவணத்தில் அசல் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல, அதில் உள்ள கையெழுத்து அசல் கையெழுத்து தான். ம.சா.ஆ.5 ஆவணமானது நகல் என்பதால் அதன் அடிப்படையில் எனக்கு எந்தவித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

2) சம்பத்குமார் 1976 ஆம் வருடம் தமிழரசன் தகப்பனார் நாராயணசாமிக்கு தாவா சொத்தை கிரயம் எழுதி கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான், ஆனால் தவறானது. ம.சா.ஆ.1 ஆவணமான வில்லங்க சான்றிதழில் 2வது இனமாக கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது மேற்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

3) ம.சா.ஆ.3 ஆவணமான வில்லங்க சான்றிதழில் 01.01.2023 இலிருந்து 04.12.2024 வரையிலாக காலக்கட்டத்திற்கு தாவா சொத்துக்குறித்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணமான வில்லங்க சான்றிதழில் சொத்து தொடர்பான மேற்கண்ட விபரங்கள் ஏதேனும் தவறுகளோ விடுபடல்களோ இருப்பின் அதற்கு இத்துறை பொறுப்பேற்க இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது எனக்கு பவர் கொடுத்த முதல்வர்களின் பெயரில் இருப்பதற்கான நகர் அளவு பதிவேட்டினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) தாவா சொத்தின் அசல் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை சம்பத்குமார் 1976 இல் தமிழரசனின் தந்தையாருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்பட்ட வில்லங்க சான்றிதழில் உள்ள குறைகளை வைத்து ஏதேனும் துர்லாபம் அடையலாம் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து யாருக்கு உரிமை உள்ளது என்று இம்மனு தாக்கல் செய்துள்ளேனோ அதே நபரே தாவா சொத்தை விற்பனை செய்த பின்னர் நான் அது குறித்து இம்மனு தாக்கல் செய்ய எனக்கு எந்தவித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.10 16:57:40 +0530

District Munsif
Mannargudi.